# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : சமூகப் பிரச்சனைகள்

பகுதி : **வேலைவாய்ப்பு திட்டங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# வேலைவாய்ப்பு திட்டங்கள்

## 1. கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (1979) (TRYSEM)

**நோக்கம்**

1. கிராமப்புறத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள இளைஞர்களுக்கு தொழில் பயிற்சியும், வியாபாரப் பயிற்சியும் அளித்து சுயவேலைத் தொடங்குவதற்கு உதவி செய்வதாகும்.
2. வயது 18-35 வயது வரை உள்ளவர்கள்.

## 2. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)

1. 1980 ம் ஆண்டு அக்டோபர் 2ம் தேதி தொடங்கப்பட்டது.
2. வறுமையை ஒழிப்பதற்கான முக்கியத் திட்டமாக செயல்படுகிறது.
3. இதன் துணைத் திட்டங்களாவன
    1. TRYSEM
    2. DWACRA
    3. கங்கா கல்யாண் யோஜனா
    4. சித்ரா
    5. மில்லியன் கிணறுத் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சுய வேலை வாய்ப்பளித்து தன்னிறைவு பெறச் செய்தலாகும்.

## 3. ஜவஹர் ரோஜ்கர் யோஜனர் (JRY) (1989)

1. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற நிலமற்றோருக்கான வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் இணைத்து தொடங்கப்பட்டது.
2. கிராமப்புற மக்களுக்கு, வேலைவாய்ப்பு திட்டமாகச் செயல்படுகிறது.

### 4. ஜவஹர் கிராம சம்ரிதி யோஜனா (1999)

1. கிராமப்புற கட்டமைப்புகளின் முன்னேற்றத்தையும் வேலையில்லாத ஏழைகளுக்கு கூலி வேலைகள் பெற்றுத் தருவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
2. கிராம சபைகள் மூலம் திட்டங்களுக்கான பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### 5. நேரு ரோஜ்கர் யோஜனா (சேஒலு) (1989)

1. நகர்ப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.
2. 1997 ல் ஸ்வர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்துடன் (Swarna Jayanthi Urban Employment) இணைக்கப்பட்டது.

### 6. வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் (1993) (EAS)

1. கிராமத்தில் 18 முதல் 60 வயதிற்குட்பட்டு உழைக்கும் தகுதியுள்ளவர்களுக்கு வேளாண்மைத் தொழில் இல்லாத நாட்களில் 100 நாட்களுக்குக் குறைவில்லாமல் வேலைவாய்ப்பு தருதலாகும்.
2. கிராமப்புற கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், மற்றும் சமூகத் திட்டங்களை செயல்படுத்தி போதுமான வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்.

### 7. ஸ்வர்ண ஜெயந்தி சஹாரி ரோஜ்கர் யோஜனா (பொன்விழா ஆண்டு தன் வேலைவாய்ப்பு திட்டம்)

1. இந்திய சுதந்திரமடைந்த 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.
2. 1997 டிசம்பர் 1 ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டது.
3. நகர்ப்புற வேலையற்ற மக்ளுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.
4. கூலி வேலைவாய்ப்பு முறை மூலமாகவோ அல்லது தன் வேலைவாய்ப்பு மூலமோ நகர்ப்புற மக்கள் வேலை பெறுவதை உறுதி செய்கிறது.
    - Urban Self Employment Programme
    - Urban Women Self-help Programme
    - Skill training for Employment Promotion amongst urban poor (STEP – UP)
    - Urban wage Employment Programme
    - Urban Community Development Network.
    - Urban Community Development Network.

### 8. ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்ஹர் யோஜனா (ஏப்ரல் 1, 1999)

1. ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP)
2. கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு திட்டம் (TRYSEM)
3. கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக்கான முன்னேற்றத் திட்டம் (DWXCRA)
4. கிராமக் கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் அளிப்புத் திட்டம் (SITRA)
5. கங்கா கல்யாண் யோஜனா
6. மில்லியன் கிணறுகள் திட்டம் (MWS)

முதலான திட்டங்களை ஒருங்கிணைத்து ஸ்வர்ண ஜெயந்தி கிராம ஸ்வரோஜ்கர் யோஜனா கொண்டு வரப்பட்டது.

வறுமை ஒழிப்பு, குழந்தைகளுக்கு பண உதவி செய்தல் போன்ற உதவிகளும் சுயவேலை வாய்ப்பிற்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன.

### 9. சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா (2001)

வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் (நுயுளு) ஜவஹர் கிராம் சம்திரி யோஜனா மற்றும் ஜவஹர் ரோஜ்கர் யோஜனா ஆகிய மூன்றும் இணைந்து இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

**நோக்கம்**

1. கிராமப்புறங்களில் சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்
2. ஏழை மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்தல்.
3. இத்திட்டச் செலவுகளை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்கின்றன.

### 10. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் (1973)

நாட்டிலுள்ள வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு தொடங்கப்பட்டது.

**நோக்கம்**

வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தி நிலம், நீர் மற்றும் இயற்கை வளங்களை சமநிலையில் கொண்டு வருவதாகும்.

## 11. அந்தியோதய அன்ன யோஜனா (2000)

1. ஏழைகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்படி 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, 3 ரூபாய்க்கு 1 கிலோ கோதுமையும் வழங்கப்படுகிறது.
2. வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடும்பத்திற்கு மாதம் 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது.

## 12. பிரதம மந்திரி ரோஜ்கர் யோஜனா (1993, அக்டோபர் 2)

இளைஞர்களுக்கு சுயமாக தொழில் தொடங்க ரூபாய் 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது.

## 13. வேலைக்கு உணவு திட்டம் (2001)

வறட்சியால் பாதிக்கப்பட்ட 8 மாநிலங்களில் (குஜராத், சத்தீஸ்கர், இமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம், மகராஷ்டிரா, ஒரிசா, ராஜஸ்தான், உத்ராஞ்சல்)உள்ள கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை அளித்து பசியை போக்குவதற்கான திட்டமாகும். வேலைக்கான கூலி பாதி உணவு, மீதி பணமாகவும் வழங்கப்படும்.

## 14. ஜெயப்பிரகாஷ் நாராயன் ரோஜ்கர் உத்திரவாத திட்டம் (2002-2003)

மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள மக்களுக்கும், இளைஞர் களுக்கும் வேலைவாய்பிற்கான உத்தரவாதத்தை ஏற்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும்.

இதன் மூலம் பின்தங்கிய மாவட்டத்திற்கு வேண்டிய நிதியுதவியையும், வேலை வாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய பயிற்சியையும் மக்கள் பெறுகிறார்கள்.

இத்திட்ட நிதியை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் நிதியுதவி அளிக்கின்றன.

## சுய உதவிக் குழுக்கள்

சுய உதவிக் குழுக்கள் என்பவை ஒரே மாதிரியான சமூக - பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட ஏழை மக்களை உறுப்பினர்களாக கொண்ட ஒரு சிறிய தன்னார்வ அமைப்பாகும். உறுப்பினர்கள் தங்களுக்குள் "**பரஸ்பர சுய உதவி & ஒத்துழைப்பு**" மூலம் தங்களின் "**பொதுவான பிரச்சனைகளுக்கு**" தீர்வு காணும் களமாகச் செயல்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களுக்கு இடையே சேமிக்கும் வழக்க வழக்கத்தை ஊக்குவிக்கின்றன.

1. சுய உதவிக் குழுக்கள் என்பவை ஓர் கிராமத்திர் உள்ள 10 முதல் 20 பெண்களைக் கொண்ட ஓர் நிதி சார்ந்த பொது **(ஸ்தாபனம்)** அமைப்பாகும். உலகில் பெரும்பான்மையான சுய உதவிக் குழுக்கள் இந்தியாவில் தான் செயல்படுகின்றன. குறிப்பாக தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில்தான் அதிகம்.
2. பெண்கள் தாங்கள் "**கடனாகப்**" பெறத்தக்க அளவிற்கு போதிய "**முதலீடுகள்**" அடையும் வரை சில மாதங்கள் தொடர்ச்சியாக சிறு தொகையினைச் சேமிப்பாக செலுத்துவர்.
3. போதிய "**முதலீடுகள்**" அடைந்த பின்பு உறுப்பினர்களுக்கு தேவையான தொகை கடனாக அளிக்கப்படும்.
4. இந்தியாவைப் பொறுத்த வரை சுயஉதவிக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து"**குறுங்கடன்களை**" எளிதாகப் பெறும் வண்ணம் சிறப்பான முறையில் இணைக்கப்பட்டுள்ளன. இதற்காக அவைகள் பதிவு செய்யப்பட்ட (அ) பதிவு செய்யப்படாத சுய உதவிக் குழுக்கள் என்ற வரையறை இல்லை.
5. எனவே சுய உதவிக் குழுக்கள் தொழில் முனைவோர்களின் கூடாரமாக காட்சியளிக்கின்றது. அரசு சாரா தொண்டு **(NGO)** நிறுவனங்களால் தொடங்கப்படும் சுய உதவிக் குழுக்கள்பொதுவாகவே "**வறுமை ஒழிப்பு**" குறித்த அம்சங்களைக் கொண்டுள்ளன.
6. சுய உதவிக் குழுக்கள் பெண்களுக்கு அதிகாரமளித்தல், தலைமைப் பண்பினை வளர்த்துக் கொள்ளுதல், ஆரம்பக் கல்வி சேர்க்கை, ஊட்டச்சத்து மேம்பாடு, பிறப்பு கட்டுப்பாடு போன்ற உயரிய நோக்கங்களை அடிப்படையாக கொண்டு செயலாற்றுகின்றன.

**சுய உதவிக் குழுக்களின் தேவைகள்:-**

1. சுய உதவிக் குழுக்கள் வறுமைக் கோட்டிற்கு வீழ் உள்ள மக்களை சுய சார்வுடையவர்களாக மாற்றுவதில் இன்றியமையாதவை களாக உள்ளன.
2. சுய உதவிக் குழுக்கள், உறுப்பினர்களின் வருவாய், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவை உயர வழிகோலுகின்றன.

3. சுய உதவிக் குழுக்கள் பின்தங்கிய சமூகத்தைச் சார்ந்த மக்களை "**முக்கியஸ்தர்களாக**" மாற்றுவதில் வினை ஊக்கிகளாக செயலாற்றுகின்றன. மேலும் சுய உதவிக் குழுக்கள் "சமுதாய-சமதர்மத்தை" அறுவடை செய்யும் களப்பணியினை ஆற்றுகின்றன.

**சுய உதவிக் குழுக்களின் நோக்கங்கள்:-**

1. சுய உதவிக் குழு பெண்களுக்கிடையே சேமிக்கும் பழக்க வழக்கங்களை கற்பிக்கின்றன.
2. தொழில்நுட்ப வசதி & பணவலிமை உடையவர்களிடமிருந்து பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.
3. பெண்கள் தங்கள் உற்பத்தி திறனை மேம்படுத்த தேவையான கடன்களை எளிதில் பெற முடிகிறது.
4. இவ்வாறான கடன்கள் மூலம் பெண்கள் போதிய பொருளாதார வளமையை(**Economic Prosperity**) எளிதில் பெற முடிகிறது.
5. பெண்களின் தன்னம்பிக்கை, திறமை, ஆளுமை ஆகியவை மேம்படுகின்றது.
6. பெண்கள் **"பங்கெடுத்தல்"(Participation)** மற்றும் **"முடிவெடுக்கும்" (Decision Making)** திறன் ஆகியவற்றை வளர்த்தெடுக்க முடிகிறது.
7. பெண்கள் ஓர் குழுவாக "**அறிவு சார்ந்த தகவல்களைப்"** பகிர்ந்து கொள்வதன் வாயிலாக, தங்களின் சுய நிதித் தேவையை தாங்களே மேலாண்மை செய்யும் திறனை அடைவதோடு மட்டுமில்லாமல், அதன் பயனை தங்களுக்குள்ளேயே பகிர்ந்து கொள்கின்றனர்.
8. பெண்கள் தங்கள் "குழு செயல்பாடு" மற்றும் "கூட்டு நடவடிக்கையின்" பூரணத்துவத்தை முழுமையாக உணர முடிகின்றது.
9. பெண்கள் தங்களது நிகழ்கால சேமிப்பினை முதலீடாக கொண்டு வருங்காலத் தேவைகளைத் திட்டமிட வழிகாட்டுகிறது.
10. சுய உதவிக் குழுக்களால் "**மக்களின் முன்னேற்றம்"** குறித்த தொடர் கற்பித்தல் & ஊக்குவிப்பின் வாயிலாக "**சமூக பொறுப்புணர்வுகள்**" உடையவர்களாக மாற்றமடைகின்றனர்.
11. சுய உதவிக் குழுக்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு போதிய ஒத்துழைப்பினையும், வாய்ப்புகளையும் அளிக்கும் களமாகச் செயல்படுகின்றன.

**தமிழகத்தில் சுய உதவிக் குழுக்களின் நிலை:-**

**மகளிர் திட்டம் :-**

1. மகளிர் திட்டம் என்பது தமிழகத்திதன் மகளிர் மேம்பாட்டு கழகத்தால் செயல்படுத்தப்படும் மகளிரின் சமூக - பொருளாதார அதிகாரமளித்தலுக்கானத் திட்டமாகும். இத்திட்டமானது அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் சுய உதவிக் குழு சார்ந்த திட்டமாகும்.
2. தமிழகத்தில் **"சர்வதேச வேளாண் முன்னேற்ற நிதியகத்தின் (IFAD) உதவியுடன் 1989-ம் ஆண்டு"** தர்மபுரியில் சிறிய அளவில் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.
3. பின்பு இத்திட்டமானது 1991-92 ல் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும், 1992-93ல் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டது.
4. IFAD யின் வெற்றியைத் தொடர்ந்து**"மகளிர் திட்டம்"** மாநில அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 1997-98 ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
5. தந்போதைய சூழ்நிலையில் தமிழகத்தில் சுய உதவிக் குழுக்கள் 59,00,000 பெண் உறுப்பினர்களைக் கொண்டு வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.
6. 31.3.2009 வரை தமிழகத்தில் உள்ள 3,91,311 சுய உதவிக் குழுக்கள் 2062.04 கோடியை சேமிப்பாக கொண்டுள்ளன.
7. தொண்டு நிறுவனங்கள் (NGO's) சுய உதவிக் குழுக்களை உருவாக்குவதிலும், அவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், அவர்களைக் கண்காணிப்பதன் மூலமாகவும் **"மகளிர் திட்டத்துடன்"** சீரிய முறையில் இணைந்து பணியாற்றுகின்றன. மேலும் தொண்டு நிறுவனங்கள் இதற்காக போதிய நிதி அளிக்கும் ஸ்தாபனமாகவும் செயலாற்றுகின்றன.
8. NGO- க்கள் மகளிர் திட்டத்தின் (கொள்கையை) கொள்கையால் திருப்தியுற்றால் இதன் ஒரு பங்குதாரராக இணைந்து செயல்படலாம்.
9. **"மகளிர் திட்டத்தின்"** உயரிய தரம், சுய உதவிக் குழுக்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் முறையான தொழிற் சார்ந்த பயிற்சிகளின் மூலம் புலப்படுகிறது.

10. இத்தகைய திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பெண்களை குழுவினுள் ஈடுபாடுடுடனும், இணக்கமாகவும், ஒத்துழைப்புடனும் பணியாற்றும் மனப்பான்மை உடையவர்களாக மாற்றுவதில் பங்காற்றுகின்றன.
11. சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள். சுய உதவிக் குழுக்களின் நடைமுறைகள் மற்றும் கருத்துகளை புரிந்து கொள்ளும் வண்ணம் 4 தொகுதிகளாக 4 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.
12. இப்பயிற்சியானது உறுப்பினர்களின் தலைமைப்பண்பு, கணகடகுப் புத்தக(Accounts) பராமரிப்பு, "குழுவாக ஒருங்கிணைந்து செயல்படுதல் (Team building) போன்ற திறமைகளை வார்த்தெடுக்க உதவுகின்றது.
13. குழு உறுப்பினர்கள் சுயமாகப் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்கவும், திறனை மேம்படுத்திக் கொள்ளவும், மேலும் சுய வேலைவாயப்பினை உருவாக்கி கொள்ளவும் வாய்ப்பளிக்கும் பொது மேடையாகச் சுய உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன.
14. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் **"தொழில் முனைவோர்களாக"** உருவெடுக்க " **5 - நாள்- தொகுப்பு - பயிற்சி"** - வழங்கப்படுகின்றது.

சமூக நலவாழ்வுத் துறை மற்றும் ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் - துறையின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் "தமிழ்நாடு மகளிர் (முன்னேற்ற) மேம்பாட்டுக்கழகம் (TNCDW) சுய உதவிக் குழுக்களை சிறந்த ஒருங்கிணைப்புடன் கட்டுக்கோப்பாக இயக்கி கொண்டிருக்கின்றன.

**வினாக்கள்**

1. சுய உதவிக் குழுக்கள் பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் விளக்குக.
2. வேலைவாய்ப்புத் திட்டங்கள் சிலவற்றை குறிப்பிட்டு விவரி.